# ஐக்கிய தீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக்குழு) வெளியீடு

மலர் : 27
இதழ் : 11, 12

யாழ்ப்பாணம்
1972
ஆடி, ஆவணி

# கூட்டுறவுச் சிந்தனை

முழு மனதுடன் ஈடுபட்டு கூட்டுறவில் நேர்மை எண்ணத்துடன் செய்யும் எந்த முயற்சியும் வீண் போகாது.

★

பதற்றமில்லாமல் சாந்தமான சூழ்நிலையில் பணிபுரியும் கூட்டுற வாளர்களால்தான் எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிக்க முடியும்.

★

வெறும் பேச்சைவிட செயல்தான் கூட்டுறவில் சிறந்த பயனை அளிக்கும்.

★

கூட்டுறவில் எவரும் ஆத்திரமோ பதற்றமோ அடைதல் கூடாது. விவேக சிந்தனை கொண்டு செயல் புரிதல் வேண்டும். அதுவே அவரின் வெற்றிக்கு வழியாகும்.

★

கூட்டுறவில் ஒருவர் அடையும் பெருமையானது அவருக்குப் பிறர் அளிக்கும் ஆதரவைப் பொறுத்துத்தான் அமைந்துள்ளது என்பதை இயக்கத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் நினைவு கொள்ளவேண்டும்.

★

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உறுதியுடன் கூட்டுறவில் செய லாற்ற உள்ளத் தூய்மையெனும் உயரிய பண்பாட்டை ஒவ்வொரு வரும் உடைத்தாயிருத்தல் வேண்டும்.

★

கூட்டுறவில் ஆத்திரமும் அவசரமும் விஷயத்தை சிக்கலாக்குமே தவிர சீரடையச் செய்யாது.

## இந்த இதழில் . . .


ஆசிரியர் தலையங்கம் 3

மறுசீரமைக்கப்பட்ட கட்டுற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதிகள் 5

ஜனநாயக சமதர்மமும் கூட்டுறவும் 11
— டாக்டர் ஓ. இராம கிருட்டினசாமி

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் தோற்றுவாயும்
வளர்ச்சியும் 17

வறியவர்களுக்காகவா கூட்டுறவுச் சங்கங்கள் 23
— கலாநிதி அலெக்ஸ் லெயிட்லோ

கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்
சங்கத்தின் உபவிதிகள் 26

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

மலர் 27 | யாழ்ப்பாணம், ஆடி, ஆவணி 1972 | இதழ் 11, 12


## தேசீய கூட்டுறவுச் சபை

அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தையும், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை உட்பட கூட்டுறவு மாவட்ட சமாசங்களையும் ஒருங்கிணைத்து பல கிளைகளைக்கொண்ட ஒரு தேசீய உச்சநிறுவனத்தை அமைப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்திற்கு அமையவே ஸ்ரீலங்காதேசீய கூட்டுறவுச்சபை என்னும் உச்ச நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஜூலை 31இல் இருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

லெயிட்லோ அறிக்கையில் (1970) கூட்டுறவு மாவட்ட சமாசங்கள் பெரும்பாலானவை பலவீனமுற்றிருப்பதாகவும், அவற்றிற்குப்போதிய நிதி இல்லை என்றும் கல்வித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய பணியாளர் இல்லையென்றும் அவை கடதாசியிலும் சில ஆட்களின் மனங்களிலும்தான் வாழ்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதே சமயம் இத்தகைய ஒரு பிரதேச அமைப்பு இன்றியமையாததென்றும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டிற்று. எனவே, பிரதேச நிறுவனங்களுக்குச் சில பொறுப்புக்களும் சில செயற் திட்டங்களும் இருத்தல் வேண்

டும் என்றும், நிதியும் திட்டமிடலும் ஒரு தேசிய நிறுவனத்தின் பொறுப்பாய் இருக்க வேண்டுமென்றும் அவ்வறிக்கை தகவுரை செய்தது.

இப்பொழுது நிறுவப்பட்டுள்ள தேசிய கூட்டுறவுச் சபையின் நோக்கங்களாவன: கூட்டுறவு இயக்கத்தை முன்னேற்றுவித்து வளரச் செய்தல்; கூட்டுறவு இயக்கத்தை வளரச்செய்து விரிவுபடுத்தி பலமூட்டும் பொருட்டு மக்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் அவர்களுக்குக் கல்வி புகட்டுதல், வழிகாட்டுதல், உதவியளித்தல்; கூட்டுறவு பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்து கூட்டுறவு இயக்கத்தின் சார்பில் கருத்துக்களைத் தெரிவித்தல்.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் இக் கூட்டுறவுச் சபையில் உறுப்பினராகச் சேரலாம். கூட்டுறவுச் சபையின் தொழிற்பரப்புக்கள் கூட்டுறவுத் திணைக்களத்தின் நிருவாகப் பிரிவுகளை ஒத்ததாய் அல்லது கூட்டுறவு ஆக்க ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட தொகை அளவினதாய் இருக்கும். இத்தொழிற்பரப்புக்களிலே பதிவு செய்யப்பட்ட காரியாலயங்களை உடைய அங்கத்துவ சங்கங்கள் வருடாந்த மாவட்டக் கூட்டத்திலும் பொதுக் கூட்டங்களிலும் சமூகமளிக்கலாம். வருடாந்த மாவட்டக் கூட்டத்திலே மாவட்டக் குழுக்கள் தெரிவு செய்யப்படும்: இக் கூட்டத்திலே தெரிவு செய்யப்பட்ட 7 பேருக்கு மேற்படாதவர்களும் ஆணையாளரால் தெரிவு செய்யப்பட்ட 3 பேருக்கு மேற்படாதவர்களும் மாவட்டக்குழுவிலே உறுப்பினராய் கடமையாற்றுவர்.

தேசிய கூட்டுறவுச் சபையின் நெறியாளர் குழுவிலே 12 பேருக்கு மேற்படாதவர்கள் இடம் பெறுவர். தற்காலிக நெறியாளர் குழுவில் ஆணையாளர் நியமித்த 7 பேர் கடமையாற்றுகின்றனர்.

(முற்றொடர்)

# மறுசீரமைக்கப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதிகள்

22. கிளைக் குழுக்கள்

(1) 8ம் உபவிதியின்கீழ் நிறுவப்பட்ட இச்சங்கத்தின் ஒவ்வொரு கிளைக்கும் உறுப்பினர் பதிவேட்டில் காணப்படும் உறுப்பினர்களுக்குள் ஆண்டுதோறும் ஏழு பேர்கொண்ட ஒரு கிளைக்குழு தெரிவு செய்யப்படவேண்டும். ஆனால் கீழ்வருவோர் ஒரு கிளைக் குழுவுக்கு தெரியப்படடல் ஆகாது.

(அ) வயதுக்கு உட்பட்டவர்கள்

(ஆ) இத்தெரிவுக்குமுந்திய 3 ஆண்டுகளுக்குள்ளும் நடத்தைப் பிழை காரணமாக குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள் அல்லது மூன்று மாதத்துக்குக் கூடிய காலத்துக்கு மறியல் தீர்ந்தவர்கள்.

(இ) கடனிறுக்கவியலாமையை வெளிப்படுத்தியவர், அல்லது கடனிறுக்க முடியாதவரெனத் தீர்ப்பு வழங்கப்பட்டவர்.

(ஈ) இந்தச் சங்கத்துக்கோ அல்லது வேறெந்தப் பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கத்துக்கோ கடன் சம்பந்தமாகவோ அல்லது வேறெந்த தொடர்பிலோ கட்டுப்பாட்டை மீறியவர்.

(உ) இச்சங்கத்தோடு வியாபாரம் செய்பவராகப் பதியப்பட்டவர் அல்லது இச்சங்கத்தின் நலன்களைப் பாதிக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்.

(ஊ) இச்சங்கத்தின்கீழ் ஏதாவது உத்தியோகம் வகிப்பவர் அல்லது இலாபம் பெறும் இடத்தை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன் அங்கீகாரம் இல்லாது பணிக்கொடை பெறுவோர்.

(எ) இந்தச் சங்கத்திலோ அல்லது இந்தச் சங்கம் உறுப்பினராகவுள்ள எந்தச் சங்கத்திலோ சம்பளம் பெறும் தொழிலாளி.

(ஏ) உறுப்பினர் என்ற ரீதியில் அன்றிப் பிறவகையில் இச்சங்கத்தோடு செய்யப்படும் ஒப்பந்தங்களிலோ அல்லது கொடுக்கல் வாங்கலிலோ அவை ஏற்கனவே செய்யப்பட்டவையாய் இருந்தாலும் சரி, தற்போது பேச்சுவார்த்தையில் இருந்தாலும் சரி நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறைகொள்பவர்கள்.

(ஐ) கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட பிரகாரம் கடந்த ஐந்தாண்டுகளுக்குள் தனது பதவியிலிருந்தோ தொழிலிலிருந்தோ விலக்கப்பட்ட ஒருவர்.

ஒ) கிளைக்குழுவினால் உறுப்புரிமை ஏற்றுக்கொள்ளப்படாத ஒருவர்.

2. கிளைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் கீழ்க்காணும் காரணங்களினால் தனது உறுப்புரிமையை இழப்பர்.

(அ) இந்த உபவிதி (1) ம் பந்தியின்கீழ் தகுதியற்றவராக நீக்கப்பட்டால்,

(ஆ) போதிய காரணங்கள் இல்லாது தொடர்ந்து மூன்று செயற்குழுக் கூட்டத்திற்கு வராது விட்ட காரணத்துக்காக கிளைக்குழுவின் தீர்மானப்படி பதவி நீக்கம் செய்யப்பட்டவராகக் கருதப்பட்டால்.

(இ) செயலாளருக்கு ஒரு மாத முன்னறிவித்தல் எழுத்துமூலம் கொடுத்து விலகிக் கொண்டால்.

(ஈ) சங்கத்தின் உறுப்பினராக இல்லாவிட்டால்.

இச்சங்கம் பதிவுபெற்ற திகதியிலிருந்து ஆறுமாதகாலத்திற்குள் முதல் கிளைக்குழு தெரிந்தெடுக்கப்படும். கிளைச் செயற்குழுவின் அடுத்த தேர்தல்கள் ஒவ்வொரு வருடமும் பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டத் திகதியிலிருந்து குறைந்தது ஆறு வாரகாலத்துக்கு முன்பு நடத்தப்பட வேண்டும்.

24. ஒவ்வொரு கிளைக்குழுவும் தங்களுக்கு ஒரு தலைவர், ஒரு உபதலைவர், ஒரு கௌரவ செயலாளர் ஆகியோரைத் தெரிதல் வேண்டும். இந்த உத்தியோகத்தர் ஒவ்வொருவரும்:-

அடுத்தவருடத்துக்குரிய புதுக் கிளைக் குழு தெரிந்தெடுக்கப்படும் வரையிலோ அல்லது

அந்தக்குழுவிலிருந்து தகுதியின்மைகாரணமாக அவர் உறுப்பினராக இல்லாது போகும் வரையிலோ அல்லது

அந்தக்குழுவினால் பதவியிலிருந்து அகற்றப்படும் வரையிலாவது அல்லது கௌரவசெயலாளருக்கு எழுத்துமூலம் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்து அந்தக்குழுவின் உறுப்புரிமையிலிருந்தோ, பதவியிலிருந்தோ விலகிக் கொள்ளும்வரையிலவர் தமது பதவிகளை வகிப்பர்.

25. ஒரு கிளைக்குழு கீழ்வரும் கடமைகளைச் செய்யும்:-

(அ) அந்தக்கிளையின் உறுப்பினர்களது நலன்களைப் பாதுகாக்கும் பாதுகாப்புச் சபையாக அது இயங்கும்.

(ஆ) தங்களுக்கும் கிளைக்கும் இடையிலுள்ள தொடர்புகள் சார்பாக உறுப்பினர்கள் செய்யும் முறைப்பாடுகளைப் பெற்று விசாரணைகள் செய்யவும் தேவையேற்படின் அவற்றைச் செயலாளருக்கோ, பொது முகாமையாளருக்கோ, பணிப்பாளர் சபைக்கோ, முறையீடு செய்யவும்,

(இ) கிளை முகாமையாளர்/செயலாளர் நியமிக்கப்பட்டால் அவர்களின் வேலையை மேற்பார்வை செய்யும்.

(ஈ) கிளை முகாமையாளருக்கோ, பொதுமுகாமையாளருக்கோ, பணிப்பாளர் சபைக்கோ தேவையான நேரங்களில் யோசனை கூறும்.

(உ) இச்சங்கத்தின் நிருவாகத்தினரால் அனுப்பப்படும் உறுப்பினரின் கடன் விண்ணப்பங்களைப் பற்றிய விபரங்களைக் கொடுத்து சிபார்சுகள் செய்யும். உறுப்பினர்களிடமிருந்து கடன்களைத் திருப்பிப் பெற்றுக்கொள்வதிலும், மற்றும் பணிப்பாளர் சபையால் கேட்கப்படும் விடயங்களிலும் பணிப்பாளர் சபைக்கு உதவிசெய்து அறிவுரை வழங்கும்.

(ஊ) இச்சங்கத்தின் பொது முகாமையாளராலும், பணிப்பாளர் சபையாலும் விசேடமாக

அனுப்பப்படும் எல்லா விடயங்களைபற்றியும் கருத்துக்கள் தெரிவித்து சிபார்சு செய்யும்
(எ) பணிப்பளர் சபையினால் குறித்தொதுக்கப்பட்ட உறுப்பினர் கல்வி, நிகழ்ச்சிகளையும் மற்றும் கடமைகளையும் திட்டமிட்டு நடத்தும்
(ஏ) உறுப்பினர்களின் அனுமதி பற்றி ஆராயும்
(ஐ) இந்த உபவிதிகளை மீறும் உறுப்பினர்களைப்பற்றி பணிப்பாளர் சபைக்கு முறையீடு செய்யும்.
(ஒ) இச்சங்கத்தின் பொதுச் சபைக்குப் பேராளர்களைத் தெரிந்தெடுக்கும்.

26. கிளைக்குழுவின் கூட்டங்கள் குறைந்தது மாதம் ஒரு முறையும், மற்றும் தேவையெனக் கருதும் சந்தர்ப்பங்களிலும் நடத்தப்படவேண்டும்.

27. கிளை முகாமையாளரும் கௌரவ செயலாளரும் கிளைக் குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் சமுகமளிக்கவேண்டும். அந்தக் கிளையின் அலுவல்கள் சம்பந்தமாக அக்கிளையின் குழுவால் கேட்கப்படும் விபரங்களை அவர்கள் கொடுத்தல் வேண்டும்.

28. கிளைக்குழுவின் கூட்டங்கள் அந்தக் கிளைக்குழுவின் தலைவராலோ, அக்கிளைக்குழுவின் அதிகப்படியான உறுப்பினர்களாலோ, இச்சங்கத்தின் தலைவராலோ, ஆணையாளராலோ அல்லது அவர் அதிகாரம் வழங்கும் ஒருவராலோ கூட்டப்படலாம்

29. ஒரு கிளைக்குழுவின் எந்தக் கூட்டத்திலும் விடயங்களைத் தீர்மானிப்பதற்கு குறைந்தது 5 உறுப்பினர்களாவது சமுகமளித்தல் வேண்டும். கிளைக்குழுவின் தலைவரோ, அவர் வராதவிடத்து உபதலைவரோ, இருவரும் வராதவிடத்து அக்குழுவின் யாராவது ஒரு உறுப்பினரோ கூட்டத்துக்கு தலைமை வகிக்கலாம். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு வாக்கு உண்டு. வாக்குகள் சரிபங்காக வருமிடத்து கூட்டத் தலைவருக்கு அறுதியிடும் வாக்கு ஒன்று உண்டு.

30. கூட்டத்தில் பேசப்பட்டோ, தீர்மானிக்கப்பட்டோ உள்ள எல்லா விடயங்களும் நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் பதியப்படவேண்டும. கூட்டமுடிவில் கூட்டத் தலைவரும், அங்கு சமுகமளித்த மற்றும் உறுப்பினர்களும் அப்புத்தகத்தில் கையொப்பமிட வேண்டும்.

31. ஒவ்வொரு கிளைக்குழுவின் கௌரவ செயலாளரும் அந்தக் கிளைக் குழுவின் கடிதத்தொடர்புகளை கவனித்தலும், கிளைக் குழுக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்களுக்கு சமுகமளித்து அந்தக் கூட்டங்களின் நிகழ்ச்சிகளை அந்தந்த நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகங்களில் பதிவு செய்தலும் வேண்டும். அவர் அந்த நிகழ்ச்சிக் குறிப்புக்களை முறையாக அத்தாட்சிப் படுத்தி இச்சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

32. ஒரு கிளையின் உறுப்பினர் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள உறுப்பினர்களை உடன் சேர்ப்பதன் மூலம் ஒரு கிளைக்குழு தன்னிடத்து ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரம் உண்டு. ஆனாலும் ஒரு கிளைக்குழுவின் செய்கையோ நடவடிக்கையோ அந்தக் கிளைக்குழு உறுப்பினர்கள் மத்தியில் வெற்றிடம் இருந்த காரணத்தினாலோ அன்றி ஒரு உறுப்பினர் தெரிவிலோ,

நியமனத்திலோ, குறைபாடு இருந்த காரணத்திலோ செல்லுபடியற்றதாகக்கப்படமாட்டாது.

பொதுச் சபை

33 (1) இச்சங்கத்தின்வெவ்வேறு கிளைகளின் பேராளர்களையும், பணிப்பாளர்சபை உறுப்பினர்களையும் கொண்டதாக இச்சங்கத்தின் பொதுச்சபை அமையும்.

33 (2) ஒவ்வொரு கிளைக் கௌரவ செயலாளருக்கும் வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்குக் குறிக்கப்பட்ட திகதிக்கு குறைந்தது ஆறு வார காலத்துக்கு முன்பாவது அக்கிளைகள் நியமிக்கக் கூடிய பிரதிநிதிகளின் தொகையை இச்சங்கத்தின் கௌரவ செயலாளர் அறிவிப்பார்.

(3) இச்சங்கத்தின் ஒரு கிளையிலுள்ள ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுக்க உரிமை உண்டு. ஒரு கிளையாவது ஒன்பது பிரதிநிதிகளுக்குமேல் அனுப்ப உரிமை கிடையாது.

(4) பொதுக்கூட்டத்தின் அங்கீகாரத்தோடும் காணிகளை கட்டிடங்களை பொறித்தொகுதிகளை, வள்ளங்களை, வலைகளை. யந்திரங்களை, மற்றும் கருவிகளை சுவீகரிக்கவோ, விற்கவோ, வாடகைக்கு விடவோ இச்சங்கத்துக்கு அதிகாரம் உண்டு.

34. 33 ம் உபவிதிக்கமைய இச்சங்கத்தின் செயலாளர் குறிப்பிட்ட அளவு பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பது ஒவ்வொரு கிளைக்குழுவின் கடமையாகும். அப்படியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதியும் ஒரு வருடாந்தப் பொதுக்கூட்டத்திலிருந்து அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் முதல் நாள் வரைக்கும் அந்தக் கிளையின் உறுப்பினர்களைப் பிரதிநிதிப்படுத்துவார். அந்தக் கிளைக் குழுவின் தலைவரும், செயலாளரும் கையொப்பமிட்ட ஒரு அதிகாரக் கடிதம் அவருக்கு வழங்கப்படும். அதேநேரத்தில் அப்படியான ஒவ்வொரு கடிதத்திலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளும் இச்சங்கக் கௌரவ செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

35. கிளைக்குழுவின் உறுப்பினருக்கிடையிலிருந்துதான் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுவர்.

36. ஒரு கிளைக்குழுவால்தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதி இச்சங்கத்திலிருந்தோ உறுப்பினராக இல்லாது போனால், அப்படியான ஒருவரின் இடத்தில் வேறொரு பிரதிநிதியைத் தெரிந்தெடுப்பதற்கு கிளைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு. அப்படியாகத்தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிக்கு அக்கிளையின் தலைவரும், செயலாளரும் கையொப்பமிட்டு ஓர் அதிகாரக் கடிதம் கொடுக்க வேண்டும். அக்கடிதத்தின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி இச்சங்கத்தின் கௌரவ செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

37. தனது உறுப்பினர்களிடையே ஏதாவது வெற்றிடம் இருக்கிறதென்ற காரணத்திற்காக மட்டும் இந்த உபவிதிகளினால் அளிக்கப்பட்ட கடமைகளையோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருத்தமான விதிகளினால் அளிக்கப்பட்ட கடமைகளையோ ஆற்றுவதற்குப் பொதுச்சபை தகுதியற்றதாகக் கணிக்கப்படமாட்டாது.

38. ஒவ்வொரு வருடமும் பொதுச்சபை வருடாந்தக் கூட்டமாக கூடவேண்டும்.

39. இச்சங்க பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டத்தைத் தவிர்ந்த மற்ற எல்லாக் கூட்டங்களும் விசேட பொதுக்கூட்டங்களென்று அழைக்கப்படும்.

40. பொதுச்சபையின் கூட்டம் ஆணையாளரால் அல்லது ஆணையாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரால் அல்லது சங்கத்தின் தலைவரால் அல்லது பணிப்பாளர் சபையினால் கூட்டப்படலாம்.

41. ஆணையாளரால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரால் அல்லது சங்கத் தலைவரால் அல்லது பணிப்பாளர் சபையினால் எழுத்துமூலம் பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டுமாறு கேட்கப்பட்டால் சங்கச் செயலாளர் ஒவ்வொரு பிரதிநிதிக்கும் ஒவ்வொரு பணிப்பாளர்சபை உறுப்பினருக்கும் கூட்டத்தைக் கூட்டும் முன்னறிவித்தல் எழுத்துமூலம் அனுப்புதல் வேண்டும்.

42. கிளைக் குழுக்களின் மொத்தத் தொகையில் மூன்றிலொன்றுக்குக் குறையாமலோ அல்லது பொதுச்சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மொத்தத் தொகையில் மூன்றிலொரு பங்குக்குக் குறையாமலோ எழுத்து மூலம் வேண்டுதல் விடுத்தால் பணிப்பாளர்சபை பொதுச்சபையின் விசேட கூட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படியாக வேண்டுதல் செய்யும்பொழுது விசேட கூட்டத்தை நடத்த விரும்பி கையெழுத்து வைப்போர்கள் தாங்கள் கொண்டுவரும் தீர்மானங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். அந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான முன்னறிவித்தல் அப்படியான தீர்மானங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எழுத்துமூலம் அனுப்பப்பட்ட எந்தவொரு வேண்டுதலுக்கும் அது கிடைத்த ஒரு மாத காலத்துக்குள் பணிப்பாளர் சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

43. பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டமும், ஆணையாளரோ அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவராலோ கூட்டப்படும். பொதுச்சபைக் கூட்டத்தையும் தவிர்ந்த ஏனைய கூட்டங்களுக்கு பொதுச் சபை உறுப்பினர்களுக்கு குறைந்தது ஏழுநாள் முன்னறிவித்தல் எழுத்துமூலம் கொடுக்கப்படவேண்டும். அந்த முன்னறிவித்தலில் கூட்டம் நடைபெறும் திகதி, நேரம், இடம், பேசவிருக்கும் விடயங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

ஆணையாளரோ அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரோ பொதுச் சபையின் விசேஷ பொதுக் கூட்டத்தைக் கூட்டும் பொழுது அக்கூட்டத்தில் பங்குபற்றவேண்டியவர்களுக்குக் குறைந்தது 48 மணித்தியால முன்னறிவித்தலாவது கொடுக்கவேண்டும்.

பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டத்தைக் கூட்டும்போது அதற்கு சமுகமளிக்க வேண்டியோருக்கு எல்லாம் அந்தக் கூட்டம்கூடும் நோக்கத்தை தெரிவித்து குறைந்தது 21 நாட்கள் முன்னறிவித்தலும், அங்கு நடைபெறவிருக்கும் விடயங்கள் பற்றி குறைந்தது 7 நாட்கள் முன்னறிவித்தலும் கொடுக்க வேண்டும். பொதுச்சபையின் எந்த ஓர் உறுப்பினரும் வரு

டாந்தக்கூட்டத்தில் ஏதாவதொரு தீர்மானத்தைக் கொண்டுவர விரும்பினுல் அத்தீர்மானத்தின் சுருக்கப் பிரதியை அக்கூட்டம் நடைபெறும் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்பே இச்சங்கத்தின் செயலாளருக்கு அறிவித்தல்வேண்டும். அப்படியான எந்தத் தீர்மானமும் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கூட்டத்து நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவேண்டும்.

44 (1) பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டத்தில் கவனிக்கப்படும் விடயங்களாவன:-

(அ) பரிசோதனை செய்த கணக்குகளின் கூற்றையும், கணக்குப் பரிசோதகரின் அறிக்கையையும் ஆராய்தல்.

(ஆ) பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கையை ஆராய்தல்.

(இ) இந்த உப விதிகளுக்கு அமைய சங்கத்தின் இலாபங்களை முடிவு செய்தல்.

(ஈ) பணிப்பாளர் சபைக்கு உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்தல்.

(உ) மற்றச் சங்கங்களின் கூட்டங்களில் இச்சங்கத்தின் பிரதிநிதிகளாக செல்பவர்களைத் தெரிந்தெடுத்தல்.

(2) பரிசோதனை செய்த கூற்றுப் பிரதிகளும், பணிப்பாளரின் பொது அறிக்கையின் பிரதிகளும், அவ்வாறான கூட்டங்களுக்குக் கொடுக்கப்படும் முதல் அறிவித்தலோடு வழங்கப்படவேண்டும்.

(3) பரிசோதனை செய்த கணக்குகளின் கூற்றும், பரிசோதகரின் பொது அறிக்கையும்' பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டம் கூடும்பொழுது சங்கத்திடம் கிடைக்காவிட்டாலும் இச்சங்கம் 38 வது உப-விதிக்கமைய வருடாந்தக் கூட்டத்தை நடத்தலாம். ஆயினும், பரிசோதனை செய்த கணக்குகளின் கூற்றும், பரிசோதகரின் பொது அறிக்கையும் கிடைத்தவுடன் இச்சங்கம் அவற்றினை ஆராய்வதற்காகப் பொதுச்சபையின் கூட்டத்தைக் கூட்டவேண்டும். அவ்வாறான கூட்டத்துக்கு அனுப்பும் அறிவித்தலுடனேயே பரிசோதனை செய்த கணக்குகளின் கூற்றுப்பிரதிகளும், பரிசோதகரின் பொது அறிக்கைப் பிரதிகளும் பொதுச்சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்புதல் வேண்டும்.

(4) பரிசோதகரின் பரிசோதனை அறிக்கை ஆராயப்படும் ஒவ்வொரு பொதுச்சபைக் கூட்டத்துக்கும் பரிசோதகருக்கு அறிவித்தல் வேண்டும். அந்தக் கூட்டத்தில் சமுகமாயிருந்து பார்வையிட அவருக்குஉரிமையுண்டு.

(வளரும்)

மக்கட்கு உதவி செய்ய வேண்டுபவர் தமது சொந்த சுகதுக்கங்களையும் புகழையும் எல்லாவகை இச்சைகளையும் எடுத்து அவற்றை மூட்டைகட்டிக் கடலில் எறிந்துவிட்டுப் பின் இறைவனிடம் வரவேண்டும். குருக்கள் அனைவரும் சொன்னதும் செய்ததும் இதுவே

— சுவாமி விவேகானந்தர்

# ஜனநாயக சமதர்மமும் கூட்டுறவும்

டாக்டர் ஓ. இராம கிருட்டினசாமி

## புதிய சமுதாயம்

நம் பாரத நாட்டில் புதிய சமுதாயத்தைப் படைக்க முற்பட்டுள்ளோம். பாரதியார் பாடியபடி இது ''ஒப்பில்லாத சமுதாயம், உலகத்திற்கொரு புதுமை''; ஜனநாயகத்தின் சிறப்புத் தன்மைகளும், சோஷலிசத்தின் சிறப்புத் தன்மைகளும் ஒன்று சேர்ந்து அமையப் பெறும் சமுதாயம். இப் புதிய சமுதாயத்துக்கு சுதந்திரம், நீதி, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகள் தூண்களாகும். சுரண்டலை ஒழித்து, ஏற்றத்தாழ்வைக் குறைத்து, வறுமையைப்போக்கி, எல்லோருக்கும் வாழ்வளிப்பது இதன் இலட்சியம். இதை அடைவதற்குப் பொருளாதார முறையையே அடியோடு மாற்றியமைத்தாக வேண்டும்; பொதுநல நோக்கோடு பொருளாதார முறையை இயக்க வேண்டும்.

## எவ்வகை அமைப்பு ஏற்றது?

இத்தகைய சமத்துவ, ஜனநாயக சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு எத்தகைய பொருளாதார அமைப்பு ஏற்றது? முதலாளித்துவம், கூட்டுறவு, பொதுவுடமை என்ற மூன்று வகை அமைப்புக்கள் உள்ளன. முதலாளித்துவம், தனி முயற்சி, தனிச்சொத்துரிமை, தனி இலாபம் என்பவைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், சுயநலத்துக்கும் சுரண்டலுக்கும் இடமளிக்கிறது. பணம் படைத்தவர்கள் பணத்தை தொழில்களிலும் வணிகத்திலும் முதலீடுசெய்து மேன்மேலும் செல்வத்தைச்சேர்த்து உழைக்காமலேயே ஆடம்பர வாழ்வு நடத்துகின்றனர்; உழைப்பவர்களோ வெறும் கூலிக்காரர்களாக சமுதாயத்தில் அடிநிலையில் கிடக்கின்றனர்; ஏற்றத்தாழ்வு மிகுகின்றது; வறுமை ஓங்குகின்றது. பொதுவுடைமை, முதலாளித்துவத்துக்கு நேர்மாருனது. இது, பொதுச்சொத்துரிமை பொதுநன்மை, திட்டப் பொருளாதாரம், மையப் பொருளாதார நிர்வாகம்

ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டது; எளியவர்களைச் செல்வர்கள் சுரண்டுவதற்கு இதில் வாய்ப்பு இராது; செல்வத்தைக் குவிக்க முடியாது. ஆனால் தனி முயற்சிக்கும், தனி மனித சுதந்திரத்துக்கும் இடமில்லை; முழு ஆர்வத்துடன் உழைக்கவேண்டும் என்ற ஆர்வம் ஊழியர்களுக்கு இராது. அதிகாரம் ஒரு சிலர் கையில் குவியச் சர்வாதிகாரப்போக்கு தலையெடுக்கும்; பொருளாதார அமைப்புக்களின் நிர்வாகத்திறன் குன்றும்; முன்னேற்றம் தடைப்படும். எனவே, இவ்விரு அமைப்புக்களும் நம் இலட்சியத்துக்கு ஏற்றவையல்ல. இவ்விரண்டின் குறைகளில்லாமல் நல்லியல்புகள் மட்டுமே ஒன்று சேர்ந்த ஓர் அமைப்பே நம் இலட்சியத்துக்கு ஏற்ற அமைப்பாகும். கூட்டுறவு முறை அத்தகைய அமைப்பாகும். கூட்டுறவு முறையின் இயல்புகள் புதிய சமுதாயத்தின் இயல்புகளுக்குப் பொருந்தியவை.

## கூட்டுறவு முறையின் இயல்புகள்

கூட்டுறவு, தனி மனிதனின் மதிப்பையும், சுதந்திரத்தையும் பேணும். கூட்டுறவு ஒன்றே மனிதனை மனிதனாக மதிக்கக்கூடிய அமைப்பாகும். கூட்டுறவில் எல்லோரும் சமம்; நிருவாகத்தில் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. சங்கத்தின் சேவைகளைப் பயன்படுத்துவதில் எல்லோருக்கும் சம வாய்ப்பு உண்டு. கூட்டுறவு ஒன்றே பொருளாதாரத்தில் ஜனநாயக நிர்வாக முறையைப் பின்பற்றும் அமைப்பாகும்.

கூட்டுறவானது செல்வம் சிலரிடம் குவிவதைத் தடுக்கின்றது; குவிதற்குரிய மூல காரணத்தையே நீக்கி விடுகின்றது. பொருளாதார முயற்சியானது, கைம்முதல், உழைப்பு, வாடிக்கை ஆகிய மூன்று காரணங்களின் கூட்டு முயற்சியாகும். கைம்முதல் வட்டி உள்ளடங்கிய அடக்க விலைக்குமேல் அதிக விலை கொடுத்து உற்பத்திப் பொருளை வாடிக்கைக்காரர்கள் வாங்குவதினால்தான் இலாபம் கிடைக்கின்றது. ஆனால் இந்த இலாபம் முழுவதையும் கைம்முதல் அபகரித்துக் கொள்கிறது. இதனால்தான் பணத்துடன் பணம் சேர்ந்து செல்வர்கள் மென்மேலும் செல்வர்களாகவும் மற்றவர்கள் மென்மேலும் வறியவர்களாகவும் ஆகின்றனர். கூட்டுறவு முறை இதைத்தடுக்கின்றது.

இவ்வமைப்பில் கைம்முத லுக்கு வெறும் வட்டி மட்டுமே கிடைக்கும். வாடிக்கைக்காரர்களுக்கு வாடிக்கை விகிதப்படி இலாபம் பகிர்ந்தளிக்கப்படும். எனவே, கூட்டுறவு சமதர்ம முறைப்படி செல்வப் பாகுபாடு ஏற்பட வகை செய்கின்றது.

அதிகாரம் குவிவதையும் கூட்டுறவு தடுக்கின்றது. வழங்கிய கைம்முதலுக்கேற்ப உரிமை கிடையாது. பத்து ரூபா செலுத்தியவருக்கும் ஒரே வாக்கு. பத்தாயிரம் ரூபாய் செலுத்தியவருக்கும் ஒரே வாக்கு. எனவே, பணத்தின் அடிப்படையில் அதிகாரம் ஒரு சிலர் கையில் குவிவதற்கு வாய்ப்புக் கிடையாது.

கூட்டுறவின் நோக்கம் இலாப நோக்கமன்று. சேவை செய்வதே இதன் நோக்கமாகும். எனவே, இலாபங் கருதி ஒருவரை ஒருவர் சுரண்டுவதற்கு இடமில்லை. ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து எல்லோரும் நலமாக வாழ முற்படுவர்.

உறுப்பினர்களிடையே சகோதரத்துவம், ஒத்துழைப்பு, கூட்டுமுயற்சி ஆகியவைகளை கூட்டுறவு வளர்க்கின்றது. கூட்டுறவு, சமதர்ம சமுதாயத்துக்குரிய பண்புகளையும் வளர்க்கின்றது. மக்களிடம் பொதுநலநோக்கு, நேர்மை போன்ற பண்புகள் நிறைந்திருந்தால்தான் சமதர்மம் தழைத்தோங்கும்; கூட்டுறவு இத்தகைய பண்புகளை அடிப்படையாகக் கொண்டது.

இவ்வாறுகக் கூட்டுறவு முறையின் இயல்புகள் யாவும் புதிய சமுதாயத்தின் இயல்புகளுக்கு முற்றிலும் பொருந்தியுள்ளன. எனவே கூட்டுறவுமுறையே புதிய சமுதாயத்திற்குஏற்ற முறையாகும். ஆகையால் நாட்டின் பொருளாதாரத்தைப் படிப்படியாகப் கூட்டுறவு மயமாக மாற்ற முற்பட வேண்டும். வேளாண்மை, கைத்தொழில், வணிகம் முதலிய துறைகள் யாவும் கூட்டுறவு மயமாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயக, சமதர்ம சமுதாயம் உருவாகும். இதற்கு மாறுகத் தனியார் துறைகளை வளர விட்டால் பொருளாதார முயற்சி ஓங்கக்கூடும். ஆனல் ஏற்றத்தாழ்வு மிகும்; செல்வம் சிலரிடம் குவியும்; குவிந்தபின் வரிகளின் மூலம் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதென்பது

மலையைத்தோண்டி எலியைப் பிடிப்பது போன்றதாகும்.

கூட்டுறவு வெற்றி பெற....

கூட்டுறவு சிறந்தது. ஆனால் நம் நாட்டில் வெற்றி பெறவில்லையே! இதை நம்பிப் புதிய சமுதாயத்தை உருவாக்க முடியுமா என்ற வினா எழும். டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளில் கூட்டுறவு வெற்றிகரமாக இயங்குவதைப் போன்று நம்நாட்டில் கூட்டுறவு வெற்றிகரமாக இயங்குவதில்லை என்பது உண்மை. இதற்குக் காரணம் கூட்டுறவு முறையன்று. நடத்தும் முறையும், நடத்துபவர்களுமே காரணமாகும்.

நிலத்தைப் பண்படுத்தாமல் விதை விதைத்தால் பயிர் செழித்து வளருமா? அதுபோல், மக்களைக் கூட்டுறவுக்குத் தயார் செய்யாமல் கூட்டுறவு நன்கு செயற்படுமா? செயற்படாது. நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோன்றி 68 ஆண்டுகளாகியும் கூட்டுறவு இயக்கத்திற்குரிய அடிப்படையை நாம் இன்னும் நிறுவவில்லை. மக்களிடையே கூட்டுறவு பற்றிய அறிவைப் பரப்பவில்லை. கூட்டுறவு உயர்வை உண்டாக்கவில்லை; கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், இயக்கம் தங்களுடைய இயக்கம், தங்களுக்காகத் தங்களால் நடத்தப்படும் இயக்கம் என்று உணரவில்லை. கூட்டுறவாளர்களிடையே விழிப்புணர்வு இருந்தாலொழிய நன்கு நடைபெறாது. அத்தகைய விழிப்புணர்வு நம் நாட்டுக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடையே ஏற்படவேண்டும். இவ்விழிப்பு இல்லாததால் சுயநலவாதிகள் கூட்டுறவுச் சங்கங்களை தங்கள் சுயநலத்துக்குக் கருவியாகப் பயன்படுத்த முடிந்து வருகின்றது. எனவே, பொதுமக்களிடையேயும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடையேயும் கூட்டுறவின் இயல்புகள், நோக்கங்கள், இலட்சியங்கள் முதலியவைகளைப் பற்றிய கருத்துக்களை முறையாகப் பரப்பவேண்டும். ஒவ்வொரு சங்கத்திலும் கூட்டுறவுக் கல்விக்குழுவை அமைத்து, கூட்டுறவுக் கல்விக்கு அக்குழுவைப் பொறுப்பாக்கி மேல்நிலைச் சங்கங்களின் உதவியுடனும் அரசாங்க நிதியுதவியுடனும் கூட்டுறவுக் கல்வித் திட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டும். சிந்தனைக்குழு, கதை, நாடகம், படக்காட்சி, வானொலி முதலிய

பல முறைகளையும், சாதனங்களையும் கையாண்டு தொடர்ந்து கூட்டுறவுக் கல்வியை நாடெங்கும் பரப்ப வேண்டும். மக்களிடையே கூட்டுறவு ஞானத்தைப் பரப்பி விழிப்புணர்ச்சியை வளர்த்துவிட்டால், மக்கள், இயக்கத்தைத்தாமே நன்கு நடத்திக் கொள்வர்.

கூட்டுறவு இயக்கம் கட்சிக்கும், சாதி சமயத்துக்கும் அப்பாற்பட்ட பொது இயக்கம் என்பதை அரசியல் கட்சிகள் யாவும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

மற்றும், கூட்டுறவுச் சங்கங்களில் நவீன நிருவாக நுட்பங்களையும் முறைகளையும் கையாண்டு நிருவாகத்தைச் சீர்திருத்தியமைக்க வேண்டும். மாநிலங்கள் தோறும் கூட்டுறவு நிருவாகப்பயிற்சி நிலையங்களை நிறுவி கூட்டுறவு நிருவாகிகளுக்கும் இயக்குநர்களுக்கும் நவீன நிருவாகத்தில் பயிற்சியை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாநிலங்கள்தோறும் கூட்டுறவு ஆராய்ச்சி நிலையங்களை நிறுவி கூட்டுறவின் பிரச்சினைகளையும், நடைமுறைகளையும் தொடர்ந்து ஆய்ந்து குற்றங்களைக் கண்டறிந்து அவைகளை நீக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் கூட்டுறவுப்பட்டப்படிப்பு, பட்டத்திற்குப் பின்படிப்பு ஆகியவைகளை ஏற்படுத்தி அவைகளில் தேர்ச்சி பெற்றவர்களை கூட்டுறவு வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே இணைப்பையையும், ஒத்துழைப்பையும் ஏற்படுத்தி இயக்கத்தை ஒருங்கிணைந்த இயக்கமாக வளர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாகக் கூட்டுறவுக்கடன் இயக்கத்துக்கும் கூட்டுறவு விற்பனை, விநியோக இயக்கத்துக்குமிடையே நெருங்கிய உறவு நிலவ வேண்டும். அதே போன்று, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குமிடையே நெருங்கிய உறவு நிலவ வேண்டும். இவ்வாறு இயக்கத்தை ஒருங்கிணைந்த இயக்கமாக வளர்த்தால்தான் பொருளாதார முறையைக் கூட்டுறவு மயமாக மாற்றி நாட்டின் இலட்சியத்தை நோக்கி முன்னேற முடியும்.

நம் நாட்டின் சமுதாயம், சாதி வேற்றுமை, உயர்வு தாழ்வு போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டது. இச்சமுகப்பின்னணி, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவுக்குப் பொருந்தாததாகும். சமூகக் கல்விமூலம் சாதி உயர்வு தாழ்வு உணர்வுகளையும் மனப்பான்மையையும் மாற்றத் தொடர்ந்து முயற்சி செய்து கூட்டுறவுக்கும் ஜனநாயகத்துக்கும் ஏற்ற பின்னணியை உருவாக்க வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவுக்கு மென்மேலும் முக்கியத்துவம் வழங்கி இயக்கம் வலுப்பெற உதவ வேண்டும். இந்த முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டால் நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் வெற்றி முரசு கொட்டும்; புதிய சமுதாயம் மலரும்; உலகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும்.

—நன்றி: கூட்டுறவு

## பணி

ஒரு வேளை புகை குடித்தற்கு வேண்டிய புகையிலையைத் தயாரித்துக் கொடுத்தாயினும் ஒரு மனிதனுக்குப் பணி செய்தல் இலட்சக்கணக்கான தியானங்களிலும் மிக மிக மேலானது என்பதை அறியும் காலமும் ஒருவருக்கு வரும்

## புன்னகை

மனத்தளர்வு மத வாழ்வாகாது. வேறெதுவேனும் ஆகலாம். எப்போதும் இனிமையோடும் புன்னகையோடும் இருப்பது ஒருவனை எப்பிரார்த்தினையையும் காட்டிலும் மிக அருகே கடவுளை அணுகச் செய்யும்.

— சுவாமி விவேகானந்தர்

(திரு. G. குருகுல சூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்-தோற்றுவாயும் வளர்ச்சியும்

## முன்னுரை

எமது கூட்டுறவு இயக்கம் பிரித்தானியாவினதும், இந்தியாவினதும் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. கூட்டுறவு இயக்கம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது எழுத்து வாசனை மிக அருகியிருந்தது. 2.3 வீதத்தினரே ஆங்கிலத்தில் எழுத்து வாசனை அறிவு பெற்றிருந்தனர். ஏனைய மொழிகளில் 31 வீதத்தினரே எழுத்துவாசனை அறிவு பெற்றிருந்தனர். அந்நியர் ஆட்சியின், குறிப்பாக ஆங்கிலேயரின் ஆட்சியின் விளைவாக பொருளாதாரத் துறையில் இருவகைப்பட்ட பொருளாதார அமைப்புக்கள் தோன்றின. பழைய கிராமிய பொருளாதார அமைப்பு ஒருவகை என்றால் மற்றையது தேயிலைத் தோட்டத்தையும் நகரத்தையும் சார்ந்த நவீன பொருளாதார அமைப்பு எனலாம். இதே போறுன் புதிய அரசியல், சமூக பொருளாதார மாற்றங்களின் விளைவாக சமுதாய ரீதியாகவும் இலங்கையில் பிளவு ஏற்பட்டது. இத்தகைய சமுதாய, பொருளாதார பின்னணியிலே தான் இலங்கையில் கூட்டுறவு இயக்கம் தோன்றிற்று.

கூட்டுறவு ஒருவகைப் பொருளாதார அமைப்பு எனலாம். போதிய வசதிகள் அற்றவர்கள் தமது பொருளாதார நலன்களைப் பேணிவளர்க்கும் பொருட்டு தன்விருப்பார்ந்த முறையிலே சம அடிப்படையிலே ஒன்று கூடுவதே கூட்டுறவாகும். பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதற்குக் கூட்டுறவு முறையைக் கடைப்பிடிக்கலாம். எடுத்துக்காட்டாக பிரித்தானியாவைப் பொறுத்த வரையில் ஆரம்பத்தில் சில்லறை விற்பனைத் துறையிலே கூட்டுறவு முறை கடைப்பிடிக்கப்பட்டது. ஆயினும் இந்தியாவையும்

இலங்கையையும் பொறுத் தவரையில் தொடக்கத்தில் கடன் வழங்குவதற்கே கூட்டுறவு முறை கையா ளப்பட்டது.

ஒரு கூட்டுறவு நிறுவனத் தை கூடுதல் + முயற்சி என வர்ணிக்கலாம். தன் னம்பிக்கை, தன்னுதவி, ஒருவர்க்கொருவர் உதவி ஆகியவையே கூட்டுறவுக் கோட்பாட்டின் அடிப்படை யாகும். இக்கோட்பாடு ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் சட்டங்களிலும் பிரமாணங் களிலும் பிரதிபலிக்கப் படுகின்றது. இவ்வித சட் டங்களுக்கும், பிரமாணங் களுக்கும் அமையவே சங்க உறுப்பினர்கள் ஒன்றுகூடி தமது உழைப்பின் பயனைத் தமக்குள் பங்கிட்டுக் கொள் கின்றனர். ''ஒரு முயற்சி'' என்ற முறையில் பொரு ளாதார வெற்றி என்ற எதிர்பார்ப்பே கூட்டுறவுச் சங்கத்தின் உந்து சக்தியாய் இருக்கின்றது. தாம் தனித் தனியே பெறமுடியாததை கூட்டு உழைப்பு மூலம் உறுப்பினர்கள் பெற முயல் கின்றனர். எனினும் தனி யார் முயற்சி, போட்டி ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்ட ஒரு பொருளாதார அமைப்பில் கூட்டுறவு இயக்கம் செயற் படுவதனால் ஒரு கூட்டுற வுச் சங்கம் தனது உறுப் பினர்களுக்கிடையே போட் டித் திறனையும், தொழில் நுட்ப வல்லமையையும் வியாபாரத்திறனையும் கட்டி வளர்க்க வேண்டியது இன் றியமையாதது. கூட்டுறவு இயக்கம் ஓர் அறக்கொடை நிறுவனமுமல்ல, வகையற்ற வர்களுக்கு தருமம் வழங் கும் சாதனமுமல்ல. போ திய வசதிகள் அற்றவர்க ளுக்கு உகந்த ஒரு வியா பார அமைப்பே கூட்டுறவு இயக்கமாகும். ஒரு கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பெ னிக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் வேறுபாடு உண்டு. ஒரு கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த வரை ஓர் உறுப்பினருக்கு எத்தனை பங்குகள் இருப் பினும் ஒரு வாக்குரிமையே உண்டு. மேலும், பங்குக ளின் அளவிற்கேற்ப ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதாயம் பங்கிடப்படுவ தில்லை. ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் முயற்சியில் உறுப்பினர்கள் பங்கு பற் றும் அளவிற்கேற்பவே ஆதாயம் பங்கிடப்படு கின்றது.

கூட்டுறவு இயக்கம் தோன்ற முன்பே மனித சமுதாயத்தில் கூட்டுறவு

இருக்கத்தான் செய்தது. எமது கிராம வாழ்வே இதற்குச் சான்று பகரும். கிராம வாசிகள் கூட்டாகச் சேர்ந்து அரிவி வெட்டு, வீடு வேய்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

பிரித்தானியாவைப் பொறுத்தவரையில் கூட்டுறவு இயக்கத்திற்கும், நகரப்புறத் தொழிலாள வர்க்கத்திற்கும் அல்லது அவர்களது தொழிற் சங்கங்களுக்குமிடையிலே தொடர்பு இருந்தது. ஆயினும் இலங்கையில் இவ்வித தொடர்பு இருக்கவில்லை. மாருக ஆரம்பத்தில் இலங்கையில் கிராமப்புற மக்களுக்குத்தான் கூட்டுறவு இயக்கம் தேவைப்பட்டது. 19 ம் நூற்ருண்டிலே ஆங்கிலேயர் இலங்கையிலே பெரிய தோட்டங்களை அமைக்க ஆரம்பித்ததும் கிராமப்புற வாசிகள் தமது நிலங்களை இழந்தது மட்டுமன்று அவர்களின் பொருளாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதனுல் கிராமப்புற விவசாயிகள் கடும் வட்டிக்குப் பணங்கொடுப்பவர்களாலும் வியாபாரிகளாலும் படுமோசமாகச் சுரண்டப்படும் நிலை ஏற்பட்டது. இவர்களது கோரப்பிடியிலிருந்து கிராமப்புற விவசாயியை விடுவிக்கும் முகமாகவே இவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு கூட்டுறவு முறை இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டது. ஐரோப்பாவிலே ரவேசன் போன்ரோர் விவசாயக் கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இங்கு அரசும் அதன் உத்தியோகத்தர்களுமே தொடக்கி வைத்தார்கள்.

19 ம் நூற்ருண்டின் இறுதியிலேயே ஒருவர்க்கொருவர் உதவி செய்யும் நோக்கத்தைக் கொண்ட கூட்டுறவுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் சங்கங்கள் இலங்கையில் தோன்றியிருந்த போதிலும் அவை பதியப்படவில்லை. கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவதற்கான சட்டம் முதன் முதலாக 1911 ல் இலங்கையில் இயற்றப்பட்டது.

## தொடக்க நிலை

### (அ) விவசாய வங்கிகள் குழுவும், கிராமப்புற நிலையும்

17ந் திகதி ஒக்ரோபர் 1904ல் இலங்கை விவசாயச் சங்கம் என ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது. இதன் நிருவாக உறுப்பாக விவசாயக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இக்குழுவின் தலை

வராக இலங்கை ஆள்பதி சேர் ஹென்றி பிளேக் கடமையாற்றினர். இக்குழுவின் ஏனைய உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்களாக இருந்தனர். இவர்களை ஆள்பதியே நியமித்தார். இச் சங்கம் நெல்லுற்பத்தி போன்றவற்றில் விசேட அக்கறை கொண்டிருந்தது. இதற்கென பல உபகுழுக்களைச் சங்கம் நிறுவியது. விவசாய ஆராய்ச்சியின் பயனை இலங்கைவாழ் விவசாயிகள் பெறும்பொருட்டு பிரதேச வாரியாகச் சங்கத்தின் கிளைகள் நிறுவப்பட்டன. விவசாய விரிவாக்க வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டுக் காலப்போக்கிலே மூன்று விவசாயப் போதனசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். 1906ம் ஆண்டு தொடக்கம் அரசாங்கம் இச் சங்கத்திற்கு சிறு நன்கொடை வழங்கி வந்தது. அக்கால கட்டத்திலே அரசாங்க விவசாயத்திணைக்களம் ஒன்று இருக்கவில்லை.

இலங்கை விவசாயச் சங்கத்தின் நடவடிக்கைகளால் நெல்லுற்பத்தியிலும் விவசாயிகளின் வாழ்க்கை பற்றியும் புத்தார்வம் பிறந்தது. விவசாயிகளை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கூட்டுறவுமுறை சிறந்தவழி என்ற எண்ணத்தை இலங்கை விவசாயச்சங்கம் வேரூன்றச் செய்யத்தலைப்பட்டது. விவசாயக்குழுவின் முதற் செயலாளராகக் கடமையாற்றிய திரு. டென்காம் அவர்களும் வேறு சிலரும் விவசாயக் கூட்டுறவுஇயக்கம்பற்றி செய்திகளைத் திரட்டி கட்டுரை வாயிலாக வெளியிடத்தொடங்கினர். இம் முயற்சிகளின் பயனுக கூட்டுறவுக் கோட்பாட்டைத் தழுவிய பல சங்கங்கள் முளைத்தன. கால்நடைகள், விளை பொருள் சங்கமொன்று வவுனியாவிலும் தென்மாகாணத்தில் வேறு சில சங்கங்களும் நிறுவப்பட்டன. இவற்றைத் தவிர தும்பறையில் கூட்டுறவுக் கடனுதவு சங்கம் ஒன்றும் நிறுவப்பட்டது. இதைப் போன்ற சங்கமொன்றும் தெலியாவிலை என்னும் இடத்தில் நிறுவப்பட்டது. இக் கால கட்டத்தில் நிறுவப்பட்ட சங்கங்களுள் தும்பறையில் நிறுவப்பட்ட சங்கம் மிக வெற்றிகரமாக இயங்கியதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலே நிருவாகப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்பட்டன என்பதில்

இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆர்வங் கொள்ளலாயினர். இந்திய அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவித்து வந்தைதை அவர்கள் அப்பொழுது அறிந்தனர். எனினும், இலங்கையிலே கூட்டுறவுக் கடனுதவு சங்கங்கள் நிறுவப்படவேண்டுமென டிசம்பர் 1908லேதான் முதன்முதல் உத்தியோக பூர்வமாகத்தகவுரை செய்யப்பட்டது. இத்தகவுரையைச் செய்தவர் அப்பொழுது பதுளையில் அரசாங்க அதிபராயிருந்த திரு ஒக்கேன் மூர்த்தி என்பவர். அன்னார் பின்பு கூட்டுறவு இயக்கத்தினை வளர்த்து ஊக்குவிப்பதில் நாட்டங் கொண்டார். அவரே பின்பு மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் (பதிவு எண் 24) முதன் முதல் தலைவராக 1914ல் இறக்கும்வரை பணியாற்றினார். வங்காளத்திலுள்ள சங்கங்களைப்போன்று ஊவா மாகாணத்து விவசாயிகளுக்கும் கடனுதவு சங்கங்களை நிறுவவேண்டுமென திரு. மூர்த்தி வற்புறுத்தினார். வங்காளச் சங்கங்களின் உபவிதிகளை ஊவா மாகாணத்தின் நிலைமைக்கேற்ப அவர் சிறிது திருத்தியமைத்தார். ஒவ்வொரு விதானை பிரிவுக்கும், அல்லதுமக்கள்தொகை கூடியதாயிருப்பின் ஒவ்வொரு கோறளைக்கும் ஒரு சங்கம் நிறுவப்பட வேண்டுமென அவர் தகவுரை செய்தார். மேலும் இவ்வுப விதிகளை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளியிட வேண்டுமென்றும், அத்துடன் கூட்டுறவு கடனுதவு சங்கங்களின் அடிப்படைக் கொள்கைகளின் சுருக்கத்தையும் அச்சிட்டு வெளியிடவேண்டும் என்றும் ஆலோசனை கூறினார். ஊவா மாகாணம் முழுவதிலும் அவர் இத்தகைய சங்கங்களை நிறுவத் திட்டமிட்டிருந்தார்.

அப்பொழுது இலங்கை ஆள்பதியாயிருந்த சேர் ஹென்றி பிளேக் அரசாங்க ஆதரவில் கடனுதவு நிறுவனங்கள் அமைக்கப்படுவதை விரும்பவில்லை. அதனால் திரு. மூர்த்தியின் தகவுரைபற்றி உத்தியோக பூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. சேர் ஹென்றி பிளேக்கிற்குப்பின் இலங்கை ஆள்பதியாயிருந்த சேர் ஹென்றி மக்கலம் கிராமப்புற மக்களின் பிரச்சினைகளை நுணுகி ஆராயத் தலைப்பட்டார். 1908ல் கண்டியிலும் கொழும்பிலும் அவர் ஊராண்மைக்காரர்களின் இரு மகா

நாடுகளைக் கூட்டினார். இம் மகாநாடுகளிலே, கடனாக வழங்கப்படும் நெல்லிற்கு கூடுதலான வட்டி அறவிடப் படுவதைப்பற்றி அவர் குறிப்பிட்டார். இக்கிராமப் புறப்பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு ஊராண்மைக்காரர் ஆர்வமற்றிருந்ததையும் அவர் உணர்ந்தார்.

இக்கால கட்டத்திலே சட்டசபை நிறைவேற்றிய தீர்மானத்தின் எதிரொலி யாகத் தத்தமது பகுதிகளில் நடைபெறும் நெல்லுற் பத்தி பற்றி அவ்வப்பகுதி அரசாங்க அதிபர்கள் அறிக் கைகள் சமர்ப்பித்திருந்த னர். அவ்வறிக்கைகளிலே கிராமப்புற விவசாயிகளின் பிரச்சினைகள் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருந் தன. விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கென ரூ. 20 இலட்சத்தை சேர் ஹென்றி மக்கலம் ஒதுக்கீடு செய்தார். இந்தியாவில் போன்று இப்பணம் விவசா யிகளுக்குக் கூட்டுக்கூட் டாகக் கொடுக்கப்படவிருந் தது. அப்பொழுது குடி யேற்ற நாட்டுச் செயலாள ராகக் கடமையாற்றியவர் ஆள்பதியின் திட்டத்தை ஏற்க மறுத்தார். எனினும் ஆள்பதி இதே பிரச்சினை களை 1909ல் நடைபெற்ற மூன்று மகாநாடுகளிலும் கிளப்பியதோடு அதுபற்றி மேலும் நடவடிக்கை எடுத் தார். ஒரு விசாரணைக் குழு வை நியமித்து, அதற்கோர் மகஜரையும் அவர் சமர்ப் பித்தார். காணி, விவசாய வங்கிகள்பற்றி 1905ம் ஆண் டில் சேர் பிறெட்றிக் நிக்கல் சன் சமர்ப்பித்த அறிக்கை யில் இந்தியாவிற்கென அவர் தகவுரை செய்திருந்த கூட்டுறவு கடனுதவு சங்கம் போன்று இங்கும் நிறுவப் படவேண்டுமென ஆள்பதி தனது மகஜரில் குறிப்பிட் டார்.

ஆள்பதி நியமித்த குழு விவசாய வங்கிகள் குழு எனப்பட்டது. அதன் அறிக் கையே (1910ல் வெளியிடப் பட்டது) இலங்கைக் கூட்டு றவு இயக்கம்பற்றிய மிக முக்கியத்துவம் வாய்ந்த முதல் ஆவணம் எனலாம். இலங்கைக்கு விவசாய வங் கிகள் தேவையா, இந்தியா விலும் வேறு நாடுகளிலும் இருக்கும் விவசாய வங்கி கள் இலங்கைக்கு எத்துணை பொருத்தம் என்பனபற்றி இக்குழு ஆராய்ந்தது.

(வளரும்)

# வறியவர்களுக்காகவா கூட்டுறவுச் சங்கங்கள்?

— கலாநிதி அலெக்ஸ் லெயிட்லோ

கூட்டுறவுச் சங்கங்கள் வறியவர்களுக்கு எதுவுமே அளிக்க முடியாது, கூட்டுறவுச் சங்கங்களில் வறியவர்களுக்கு இடமேயில்லை என்ற தோரணையில் அண்மையில் ஒரு கூட்டுறவு உத்தியோகத்தர் திருவாய் மலர்ந்தது உலகத்திலேயுள்ள பல கூட்டுறவாளர்களை அதிர்ச்சியுறச் செய்தது.

கூட்டுறவாளர்கள் மட்டுமன்று, இயக்கத்திற்கு வெளியே உள்ளவர்களும் கூட்டுறவுச் சங்கங்களின் தன்மையையும் பங்கையும் பற்றிய இத்தகைய திடுக்கிடச் செய்யும் கருத்தை யிட்டு வியப்பிலாழ்ந்தனர். நாளிதழ்கள் இக்கருத்திற்கு விளம்பரம் கொடுத்ததோடு அவற்றில் சில தமது ஆசிரியத்தலையங்கங்களிலே இக்கருத்து குறித்து தமது வியப்பைத் தெரிவித்தன. சுருங்கக்கூறின் இக்கூற்று பெரும் சர்ச்சையையே கிளப்பிவிட்டதெனலாம்.

இன்றைய சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கூட்டுறவுக்கொள்கைகளைக்கடைப்பிடிப்பதுபற்றி இக்கூற்று அதீத விளக்கமொன்றை அளிப்பதாக இருந்தபோதிலும் எம்மைச் சில அடிப்படைக் கேள்விகளைக்கேட்கும்படி அது தூண்டுகின்றது என்பதில் ஐயமில்லை. கூட்டுறவுச் சங்கங்கள்பற்றி எமது நோக்குக் கோணத்தையும், கூட்டுறவு இயக்கத்தைப்பற்றியும் நுணுகி ஆராய இக்கூற்று தூண்டுகின்றது. கூட்டுறவுச்சங்கம் என்றால் என்ன, அது எதற்காக, அது எவ்வாறு இயங்க வேண்டும், அதற்குரியவர்கள் யார் என்று நாம் எம்மையே கேட்கவேண்டியிருக்கின்றது.

இவ்வினாக்களுக்கு விடை பகரமுன்பு ஒன்றைச் சுட்டுவது சாலவும் பொருந்தும். வரலாற்றில் தோன்றும் ஒவ்வொரு இயக்கமும், ஒவ்வொரு தத்துவமும் விரைவில் பிளவுபடுவதை நாம் அவதானிக்கலாம். ஆழ்ந்த சிந்தனைகளைப் பற்றி கருத்து

வேறுபாடற்ற முறையில் பொருள்கொள்ள முடியாது போலும். ஒரு பெரிய தலைவரோ அல்லது குருவோ இறந்தபின் அவரது கோட்பாடுபற்றி அவரது சீடருக்கிடையே பூசல்கள் தோன்றும். தமது குறிப்பிட்ட நோக்குக் கோணத்தை அல்லது கொள்கையைப் பாதுகாக்கும் பொருட்டு கொலை செய்யவோ அல்லது போர் தொடுக்கவோ சீடர்கள் தயங்கமாட்டார்கள்.

தம்மைக் கிறீத்தவர்கள் என அழைத்துக்கொள்பவர்கள் பிளவுபட்டுப் போட்டா போட்டி இடுகின்றனர். உண்மையில் எல்லாப் பெருஞ்சமயங்களுமே சொற்போர்களிலும், கொள்கைப் போராட்டங்களிலும் ஈடுபடுகின்றன. அரசியற்கோட்பாடுகளும் இடது வலது எனப் பிளவுபட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாகக் குடியாட்சி என்ற சொல்லை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது? சமூக இயலைச் சார்ந்த வெவ்வேறு இயல்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கோட்பாடுகள் நிலவுகின்றன. சமூக உடைமை என்பது நாம் எங்கு வாழ்கின்றோம்என்பதையும் எந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றோம் என்பதையும்பொறுத்துபொருள் வேறுபாடு கொண்டதாய் விளங்குகின்றது. பொதுவுடைமையைப் பொறுத்தவரை அது நவீன உலகத்தில் அண்மையில் தோன்றிய ஒரு கோட்பாடாக இருந்தபோதிலும் அவ்வியக்கம் பிளவுபட்டு போர்க்கோலம் பூண்ட நாடுகளாகவும் கட்சிகளாகவும் இப்பொழுது காட்சியளிக்கின்றது. மனிதரின் நடத்தையை ஆழ்ந்த பற்றுறுதிகள் மாற்ற வல்ல ஆற்றல்தான் என்னே! எனவே கூட்டுறவாளருக்கிடையே கருத்துவேறுபாடுகள் நிலவுவது வியப்பன்று. கூட்டுறவு இயக்கத்தை எல்லோரும் ஒரே கண் கொண்டு நோக்கினல்தான் நாம் உண்மையில் ஆச்சரியப்பட வேண்டும். நவீன கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு 200 ஆண்டுகளுக்கு உட்பட்டது. ஆனல், கூட்டுறவு இயக்கத்திற்கு உள்ளேயும் வெளியிலும் பல்வேறு கொள்கைகளும் கருத்து குழாங்களும் உருவாகி விட்டன. குரு கூறியவற்றைப் பற்றி சீடருக்கிடையே உடன்பாடு நிலவவில்லை. இதனை நாம் மனதிற்கொண்டால் கூட்டுறவுச் சங்கங்களில் வறியவர்களுக்கு இடமேயில்லை என்ற கூற்றைக்

கேள்வியுற்றதும் நாம் வியப்படைய வேண்டியதே யில்லை. கூட்டுறவு இயக்கம் இன்று உலகெங்கும் பரவியுள்ளது. இருபத்திரண்டு கோடிமக்கள் இவ்வியக்கத்தில் உறுப்புரிமை வகிக்கின்றனர். உலகளாவிய இத்தகைய ஓர் இயக்கத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகளின் பிரதிபலிப்பே ஏழைகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களில் இடமில்லை என்ற கூற்றுகும்.

கூட்டுறவாளர்கள் எந்தெந்தக் கருத்துக் குழாத்தைச் சார்ந்தவர்கள் என இனங்கண்டு கொள்வது சிந்தனைத் தெளிவிற்கு வழி வகுக்கும். வெவ்வேறு கருத்துக்குழாங்கள் பற்றி கூட்டுறவுத்தலைவர்களுக்கிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுவதால் இவ்வாறு இனங்காண்பது கடினமாயிருக்கும். எனது எண்ணப்படி நான்கு முக்கிய கருத்துக் குழாங்கள் உள. அவற்றினை இனி ஆராய்வோம்.

(வளரும்)

## கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரப் பரீட்சை-உயர்பிரிவு 1972

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரப் பரீட்சை (உயர்பிரிவு) 16-10-72 தொடக்கம் 23-10-72 வரை நடைபெறும். இப்பரீட்சைக்கு 15-9-72க்குமுன் விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பும் முகவரி: அதிபர், கூட்டுறவுக்கல்லூரி, பொல்கொல்லை. விண்ணப்பப்படிவங்களை யாழ்-கூட்டுறவுக்கல்லூரி அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம். தபால்மூலம் பெற விரும்புவோர் விலாசமிடப்பட்ட 15 சத தபால் தலை ஒட்டிய கடித உறை அனுப்பி வைக்க வேண்டும்.

கூட்டுறவுக் கல்லூரி,
யாழ்ப்பாணம்
3-8-72.

வெ. நடராசா,
அதிபர்.

(முற்றொடர்)

# கள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள்

(2) உபதலைவர் நிருவாக சபையின் உபதலைவராக இருத்தல் வேண்டும். தலைவர் இல்லாதகாலத்தில் பொதுச் சபையினதும், நிருவாகசபையினதும் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தற்கு இவருக்கு அதிகாரமுண்டு. தலைவரானவர் இலங்கையில் இல்லாத காரணத்தினுல் அல்லது சுகவீனம் காரணமாக, தமது கடமையினைச் செய்ய இயலாதவராயுள்ளாரென நிருவாகசபை அபிப்பிராயப்படுமிடத்து, உபதலைவர், தலைவருக்குப் பதிலாகக் கடமையாற்றுவார்.

32. காரியதரிசி

(1) காரியதரிசி ஒருவர் இருத்தல் வேண்டும். இவர், நிருவாகசபையின் அங்கத்தவராக இல்லாதவிடத்து, பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் தனைகமைக்கொடையொன்றினை அல்லது சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். கூட்டங்களை அழைப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒருவர் அல்லது பலர் கோருமிடத்து, காரியதரிசியானவர் பொதுச்சபையினதும் நிருவாகசபையினதும் கூட்டங்களைக் கூட்டலாம். அத்தகைய ஒவ்வொரு கூட்டத்தின் போதும் இவர் சமுகமளித்து கூட்ட வரலாறுகளைப் பதிவு செய்து, தலைவரால் அல்லது நிருவாகசபையினுல் பணிப்பதற்கேற்ப மற்றும் நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

(2) காரியதரிசியானவர் ஒவ்வொரு அங்கத்தவரின் பெயரையும், அவர் அங்கத்துவம் பெற்ற திகதியையும், அவர் அங்கத்துவம் இழந்த திகதியினையும் காட்டக்கூடிய சங்க அங்கத்தவர் இடாப்பு ஒன்றினையும் வைத்திருத்தல் வேண்டும்.

33. முகாமையாளர்

(1) உபவிதி 27 (4) இன் பிரகாரம் நியமிக்கப்பட்ட சங்க

முகாமையாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவரே சங்கத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராயிருப்பதுடன் சங்க அலுவல்களைத் திறம்படச் செய்து முடித்தற்கு நிருவாகசபைக்குப் பொறுப்பாளியாகவும் இருத்தல் வேண்டும். நிருவாகசபை விதிக்கலாகும் கொள்கைக் கமைவாக சட்டத்துக்கும் இவ்வுபவிதிகளுக்கும் ஏற்ற வகையில், சங்கத்தின் நோக்கங்களை எய்துதற்பொருட்டு ஊக்கத்துடன் கருமமாற்றுதல் வேண்டும்.

(2) முகாமையாளர் சங்கத்துக்குக் கிடைக்கும் பணத்தைப் பொறுப்பேற்று நிருவாகசபை விதிக்கும் பிரகாரம் செலவு செய்யவேண்டும். அவர் உரொக்கப்புத்தகத்தை முறைப்படி எழுதிவைத்து, சரியென்பதற் கடையாளமாகக் குறைந்தபட்சம் மாதமொருமுறை அதில் கையொப்பமிட்டு, தலைவர் அல்லது நிருவாகசபை அல்லது எண்பார்வையாளர் அல்லது ஆணையாளரின் அனுமதி பெற்றவர் கேட்கும்போது கைரொக்கத்தைக் காட்ட வேண்டும். முகாமையாளர் ரூபா. 200/-க்கு மேற்பட்ட தொகையை கைரொக்கமாக வைத்திருக்கலாகாது. அவர் ஆணையாளரின் அனுமதி பெற்று மக்கள் வங்கியில் அல்லது வேறு வங்கியில் மேலதிக பணத்தைப் போட்டுவைக்க வேண்டும். எல்லாப் பணமும் சங்கத்தின் பெயரில் போட்டு வைக்கப்படல் வேண்டும். முகாமையாளர், நிருவகா சபை அல்லது ஆணையாளர் விதித்ததன் பிரகாரம் பிணை கொடுக்க வேண்டும்.

34. இடாப்புக்கள் புத்தகங்கள் முதலியன.

(1) ஆணையாளர் காலத்துக்குக் காலம் குறிப்பிடுகின்ற புத்தகங்களையும், இடாப்புக்களையும் மற்றும் சாதனங்களையும் சங்கம் வைத்திருத்தல் வேண்டும்.

(2) சங்கத்தின் காப்புப்பெட்டித் திறப்புகளையும், புத்தகங்களையும், இடாப்புக்களையும், ஏனைய சாதனங்களையும், சங்கத்தின் எந்தெந்தப் பணியாளர் எடுத்துத் தகுந்த பாதுகாப்பில் வைக்கவேண்டுமென்பதைச் சங்கத்தின் முகாமையாளர் நிர்ணயித்தல் வேண்டும். அத்தகைய பணியாளர் ஒவ்வொருவரிடமிருந்தும் முகாமையாளர் பற்றுச் சீட்டொன்றினைப் பெற்று, தன்னிடம் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

(3) கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் ஒரு பிரதியும், அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகள் ஒரு பிரதியும், இந்த உபவிதிகளின் ஒரு பிரதியும் நியாயமான வேளைகளில் விரும்பியவர் இலவசமாகப் பார்வையிடுவதற்கு சங்கத்தின் பதிவு பெற்ற விலாசத்தில் வைக்கப்படல் வேண்டும்.

35. பண நிதிகளின் உபயோகம்

சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் இந்த உபவிதிகளின் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கும் சங்கப் பணவிதிகள் உபயோகிக்கப்படலாம்.

(i) பணியாளரின் பிணைப் பணம், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டவிதிச் சட்டத்தின் பிரகாரம், சங்கத்தின் பெயரில் நிலையான வைப்புப் பணமாக வேருக வைக்கப்படலாம். அதன்மீது பெறப்படும் வட்டி அந்தந்த பணியாளரின் பெயரில் வரவு வைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

(ii) சங்கத்தின் காசோலைகளிலும், சங்கப்பணத்தைத் திருப்பியெடுப்பதற்குரிய பத்திரங்களிலும் தலைவர் அல்லது உபதலைவரும் முகாமையாளர் அல்லது முகாமையாளருக்காகப் பதில் கடமையாற்றுதற்கென நியமிக்கப்பட்டவரும் கையொப்பமிடல் வேண்டும்.

(iii) சங்கத்திஞல் பிரதி தினமும் பெற்றுக்கொள்ளப்படும் சகல ரொக்கமும் அடுத்த நாளாவது வங்கியிலிடப்படல் வேண்டும்.

36. கடன்கள்

நிருவாகசபை பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக அங்கத்தவருக்குக் கடன் வழங்கலாம்.

(1) கடன் கேட்பவருக்குக் கடன் உண்மையில் அவசியம் தேவையென்பதை நிருவாகசபை நிச்சயமாய் அறியவேண்டும். அத்துடன் தான் வேறிடத்தில் இதே தேவைக்குக் கடன்படுவதில்லையென்று கடன் கேட்பவர் எழுத்தில் வாக்குறுதியளிக்க வேண்டும். கடன் பெறுபவர், பதிவு பெற்ற வேறு சங்கங்கள், ஏனைய இடங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவகையில் தமக்கு நிலுவையிலுள்ள செல்பொருட்கள் பற்றி எழுத்து மூலமாக வெளிப்படுத்தல் வேண்டும்.

(2) கூடியமட்டுக்குப் பொருட்கள் வழங்கப்படல் வேண்டும்.

(3) சங்கத்தினதும் குறித்த அங்கத்தவரினதும் நலனுக்கு எதிரிடையானவன்றென்று நிருவாகசபை கருதும் பயன் தரு அல்லது அவசிய தேவைகளுக்கே கடன் கொடுக்கப்படலாம்.

(4) 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்காயின் ஓர் அங்கத்தவரின் சொந்த ஆதனப்பிணை மேலதிகமாகப் பெறப்படல் வேண்டும்.

(5) பொதுக்கூட்டத்தினதும் ஆணையாளரினதும் முன் அனுமதியின்றி 5 வருட காலத்துக்கு மேற்பட்ட காலத்துக்குக் கடன்கொடுக்கப்படலாகாது.

(6) பொதுக்கூட்டம் விதித்த கடன் எல்லை வாங்கிய பங்குகளின் தோற்ற மதிப்பின் 5 மடங்கு பிணை தேவையாயின் ஈடுவைத்த ஆதனத்தில் அரைவாசி விலை ஆகிய முற்றிலும் ஆகக் குறைந்த தொகைக்குமுழுக் கடனும் மேற்படும் முறையில் எவருக்கும் கடன் வழங்கப்படலாகாது.

(7) கடனளி இரு பிணையாளிகளுடன் கடன் முறிக்குப் கையொப்பமிட்டுக் கடன் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதுடன் தேவையாயின், இன்னும் பிணையாளிகளைத் தேடிக்கொடுக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

(8) சங்கத்துக்கு அவரால் செலுத்தப்படவேண்டிய பங்

குப்பணம் அல்லது ஏதேனும் கடன் நிலுவையிருக்கும் அங்கத்தவருக்கு எதுவித கடனும் கொடுக்கப்படலாகாது.

(9) கடன் தவணைப்பணம் நிலுவையில் நிற்குமாயின் அல்லது கடன் பணம் பிழையான நோக்கத்துக்கு உபயோகிக்கபடுமாயின், கொடுக்கப்பட்ட கடன் அறிவித்தலின்றி அறவிடப்படலாம்.

(10) பிணையாளரின் சம்மதமின்றி கடன் தவணையை நீடிக்கலாகாது.

(11) அங்கத்தவர் மட்டும் பிணையாளிகளாம். ஒவ்வொரு அங்கத்தவரும் இவ்விரண்டு கடன்களுக்கு மேல் பிணை நிற்கலாகாது.

(12) எந்த நோக்கங்களுக்காக கடன்கள் கொடுக்கப்படலாம் என்பதையும், அத்தகைய ஒவ்வொரு வகையினதான கடனைப் பொறுத்த வகையில் அதனைத் திருப்பிக் கொடுப்பதற்கு அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கால அளவினையும் பொதுக்கூட்டம் குறிப்பிடுதல்வேண்டும்.

(13) சங்கத்தினால் வழங்கப்படும் கடனுக்கும், வட்டி வீதமானது சங்கத்தினால் பெறப்படும் கடனுக்கிருப்பதுபோலவே 6 வீதத்துக்கு மேற்படலாகாது.

37. சிக்கனம்

அங்கத்தவரிடையே சிக்கனப்பழக்கத்தினை ஏற்படுத்தற்காய திட்டமொன்றினைப் பொதுச்சபை வகுத்துக் கொள்ளலாம்.

38. வியாபாரம்

(1) உற்பத்திப் பொருட்கள் எல்லாவற்றையும் பாவனையாளருக்கு கைக்காசுக்கே விற்பனை செய்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களையும் ஆணையாளரால் அங்கீகரிக்கப் பெற்ற இதர நிறுவனங்களையும் தவிர, ஏனையோருக்குக் கடனாக எதுவுமே கொடுத்தலாகாது.

(2) சங்கத்துக்கு வழங்கப்பட்ட அல்லது சங்கத்தின் ஆதீனத்தில் வைக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களைப் பிணையாகக் கொண்டு குறித்த பிணையின் மதிப்பு விலையின் 75 வீதத்துக்கு அங்கத்தவர் அனைவருக்கும் முற்பணம் கொடுக்கப்படலாம்.

(3) ஒவ்வொரு அங்கத்தவரும் திருவாகசபை விதிக்கும் பிரகாரம், தனது கள்ளினை அல்லது கள்ளினின்றும் உற்பத்தி செய்யப்பட்ட வேறு ஏதேனும் பொருளினை, சங்கத்தின் மூலமாக விற்பது பற்றி சங்கத்துடன் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(4) அங்கத்தவரால் சங்கத்துக்குக் கொடுக்கப்படும் உற்பத்திப் பொருட்களின் தரத்தினையும், அளவினையும் பொறுத்தவகையில், ஒவ்வொரு அங்கத்தவரும் நடைமுறை விதிகளுக்கும் திருவாகசபையின் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டவராகவே இருத்தல் வேண்டும்.

39. கழித்தெழுதல்

கூட்டுறவுச்சங்கச் சட்டத்துக்கு ஏற்ப அமைத்தாலன்றி சங்கம் தனக்கு வரவேண்டிய கடனை அல்லது அவற்றின் ஒரு பாகத்தைத்தானும் கழித்தெழுதலாகாது.

40. நிதியாண்டு

சங்கத்தின் நிதியாண்டு ............ இல் ஆரம்பமாகி ............ இல் முடிவடையும்.

41. பிற்காலச் சேமநிதி

சட்டம் விதிக்கும் பிரகாரம், சங்கமானது பணியாளரின் நலன்கருதி யாதேனும் பிற்காலச் சேமநிதிக்கு உதவு தொகைகள் அளிக்கலாம்.

42. இலாபங்கள்

(1) சங்க இலாபத்தின் குறைந்தது 25 வீதம் மந்திரியவர்கள் வேறு விதம் விதித்தாலன்றி, சங்கத்தின் அடக்கப்பணத்தோடு சேர்க்கப்படல் வேண்டும். கூட்டுறவுச் சங்க விதிகளின் கீழ் திரட்டப்பட்ட கூட்டுறவு நிதிக்கு ஆணையாளர் விதிக்கும் வீதப்படி பணம் கட்டப்பட வேண்டும்.

(2) பாக்கி இலாபத்தைப் பின்வருமாறு செலவு செய்யப் பொதுச் சபைக்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

(அ) பணியாளருக்கு மிகை யூதியம் கொடுத்தல்.

(ஆ) செலுத்திய பங்கு முதல் மீது, சட்டம் அனுமதிக்கும் வீதத்துக்கு மேற்படாத வட்டி கொடுத்தல்.

(இ) சங்கத்துக்கு அல்லது சங்கத்தின் மூலம் விற்கப்பட்ட பொருட்கள் சம்பந்தப்பட்ட வகையில் அங்கத்தவருக்கு இலாபம் வழங்கல்.

(ஈ) வேலையாளர் நட்டஈட்டு நிதி.

(உ) பொதுநல நிதி, இதற்கு ஒதுக்கப்படும் பணம், அடக்கப்பணத்திற்கு இலாபம் ஒதுக்கிய பின்னர் எஞ்சும் பாக்கி இலாபத்தின் 10 வீதத்திற்கு மேற்படலாகாது.

(ஊ) கட்ட நிதி:

(எ) பங்குமாற்று நிதி.

(ஏ) எதிர்பாரச் செலவு நிதி,

(ஐ) ஆணையாளரின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பெற்ற வேறு ஏதேனும் நிதி, எனினும் சங்கமானது வைப்புப் வைப்புப்பணமிட்டவருக்காவது, கடன் கொடுத்தவருக்காவது திருப்திகரமான வகையில் பணத்தினைத் திருப்பிச் செலுத்தாதவிடத்தும், நிருவாகசபை பொதுச்சபைக்குச் சிபார்சு செய்த வீதத்துக்கு அல்லது தொகைக்கு மேற்படவும் ஆணையாளர் எழுத்தில் கொடுத்த அனுமதியின்றியும் இலாபங்களைப் பங்கீடு செய்தலாகாது. இலாபப் பங்கீடு சம்பந்தமாக, பொதுச்சபையின் கூட்டமொன்றில முடிவு செய்யப்படும் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தீர்மானம், வேறொரு பங்கீட்டுத் திட்டத்தினை ஆணையாளர் அங்கீகரித்தாலன்றி, அடுத்து வரும் பொதுக்கூட்டம் எவற்றிலும் மாற்றப்படக்கூடாது.

(3) அங்கத்தவருக்குரிய பங்கு இலாபமும் உற்பத்திப் பொருளின் இலாபப் பாகமும் காசாக அல்லது பொதுச்சபை விதித்த வேறு முறையில் கொடுக்கப்படலாம். எனினும் அங்கத்தவர் ஒருவர் மிகக் குறைந்த தொகையான ஐந்து பங்குகளையேனும் உரியவராக ஆகும்வரை அன்னாருக்குச் செல்லவேண்டிய பங்கு இலாபமும் உற்பத்திப் பொருளின் இலாபங்களும் அவரு

டைய பங்குக்கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

(4) உற்பத்திப்பொருள்களின் இலாபமாகக் கொடுக்கப்பட வேண்டிய தொகையும், எந்த அடிப்படையில் இக்கொள்வனவு செய்யப்பட வேண்டுமென்பதும் நிருவாகசபையினால் நிர்ணயிக்க்ப்படல் வேண்டும்.

(5) கொடுபடவேண்டிய திகதியிலிருந்து 6மாதத்துக்குள் எவரேனும் உரிமை பாராட்டப்படாத இலாபபாகம் அடக்கப்பணத்துடன் சேர்க்கப்படும். அதன்பின் இலாபபாகம் கோரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

43. கூட்டுறவு நிதி

ஆணையாளர் முறைக்கு முறைவிதிக்கும் பணத்தைச் சங்கம் வருடாந்தம் கூட்டுறவு நிதிக்குக் கட்டவேண்டும்.

44. அடக்கப்பணம்

அடக்கப்பணம் அங்கத்தவரிடையே பிரசுரிக்கப்படலாகாது. அதில் அங்கத்தவர் எவருக்கேனும் பங்குரிமை இருத்தலாகாது. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்துக்கமைய இது பயன்படுத்தப்படலாம்.

45. பிணக்குகள்

இந்த உபவிதிகளின் சொல் விளக்கம் சம்பந்தமான ஏதேனும் பிணக்குகள் அல்லது சங்கத்தின் அலுவல் சம்பந்தமாக ஏற்படும் பிணக்குகள், கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் ஆணையாளரின் தீர்ப்புக்கு ஒப்புவிக்கப்படல் வேண்டும்.

46. ஒப்பந்தங்கள்

சங்கத்தின் பேரில் செய்யப்படும் ஒப்பந்தங்கள் சம்பந்தமான சாதனங்கள் சங்கத்தின் பொதுமுத்திரையையும், நிருவாகசபையின் அதிகாரத்தின்படி சங்கத் தலைவரினதும் காரியதரிசி அல்லது முகாமையாளரினதும் கையொப்பங்களையும் தாங்க வேண்டும். இவ்வாறு கையொப்பமிடப்பட்ட அல்லது முடிக்கப்பட்ட உத்தியோகத்தரின் நியமனத்தில் அல்லது தகுதியுடைமையில் எதுவித குறையும் பிறகு காணப்பட்ட பொழுதிலும் அன்னார் ஒவ்வொருவரும் முறைப்படி நியமிக்கப்பட்டவராயும், முறைப்படி தகுதியுடையவராயும் இருந்தாற்போல் பலமுடையதாய் சங்கத்தையும் அங்கத்தவரையும் கட்டுப்படுத்தும்.

47. முத்திரை

சங்கத்தின் பொது முத்திரை சங்கக் காரியதரிசியின் பாதுகாப்பில் வைக்கப்படல் வேண்டும். நிருவாகசபையின் தீர்மானத்தின்படியன்றியும் சங்கத்தலைவரினதும், காரியதரிசி அல்லது முகாமையாளரினதும் சமுகத்திலன்றியும் எப்பத்திரத்திலும் இம்முத்திரை இடப்படலாகாது. இவ்வாறு முத்திரையிடப்படும் பத்திரத்தில் சங்கத் தலைவரும் காரியதரிசி அல்லது முகாமையாளரும் கையொப்பமிடல் வேண்டும்.

48. உபவிதித் திருத்தம்

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, சங்கம் தனது உபவிதிகளிற் திருத்தத்தினைச் செய்யலாம். அத்தகைய ஒவ்வொரு திருத்தத்தினைச் செய்

யலாம். அத்தகைய ஒவ்வொரு திருத்தமும் பின்வரும் முறையில் செய்யப்படலாம். (அ)சங்கத்தின் மொத்த அங்கத்தவரின் அரைவாசிக்கு மேற்பட்டோரின் வாக்குகளைப் பெறும் பொதுக்கூட்டத் தீர்மானம் அல்லது (ஆ) சமுகமளிப்பவரின் 2/3 பங்கினரின் வாக்குகளைப் பெறும் ஆணையாளரின் முன் அனுமதிபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்த உபவிதிகளின் பிரகாரம் நிறைவெண் இருத்தல் வேண்டும்.

(2) உபவிதி திருத்தத்தைப் பற்றிய பிரேரணை அங்கத்தவருக்கு அனுப்பப்படும் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டு பொதுக்கூட்டம் ஆணையாளரால் அழைக்கப்பட்டாலன்றி கூட்டத்தைக் குறித்து குறைந்தபட்சம் 14 நாள் அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும். அல்லாவிடில் இவ்வித தீர்மானம் வலியுடைத்தன்று.

(3) ஆணையாளரின் பதிவு பெறும்வரை புது உபவிதியாவது உள்ள உபவிதியிற் செய்யப்பட்ட திருத்தம் அல்லது மாற்றமாவது வலிவுடைத்தன்று. இதற்குச் சங்கம், தீர்மானத்தின் இரண்டு பிரதிகளையும், இந்த உபவிதிகளின் ஏற்பாடுகள் நிறைவேற்றப்பட்டனவென்று உறுதிகூறும் தலைவரினதும் காரியதரிசியினதும் கையொப்பம் பெற்ற ஓர் அறிக்கையையும் ஆணையாளருக்கு அனுப்பவேண்டும். இவ்வறிக்கையில்' சங்க அங்கத்தவரின் தொகையும் குறித்த பொதுக்கூட்டத்தில் சமுகமளித்த அங்கத்தவரின் தொகையும், உபவிதி திருத்தப் பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்தவரின் தொகையும் குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன் அங்கத்தவருக்கு எத்தனை நாள் அறிவித்தல் கொடுக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்ட கூட்ட நிகழ்ச்சி நிரல் என்னவென்றும் இவ்வறிக்கை கூறவேண்டும்.

49. சங்கக் குலைவு

ஆணையாளரின் கட்டளையால் மட்டும் சங்கம் குலைக்கப்படலாம்.

50. சொல் விளக்கம்

இந்த உபவிதிகளில் ''ஆணையாளர்'' என்பது கூட்டுறவு ஆக்க ஆணையாளரையும், பிரதி ஆணையாளரையும், சிரேஷ்ட உதவி ஆணையாளரையும், உதவி ஆணையாளரையும் குறிக்கும். ''மந்திரியார்'' என்பது குறித்த காலத்தில் கூட்டுறவின் ஆக்கப் பொறுப்புள்ள மந்திரியவர்களைக் குறிக்கும்.

கீழே கையொப்பமிட்டுள்ளவர்களால் மேற்தாண் உபவிதிகள் பதிவுக்காக 19 ...... ஆம் ஆண்டு ............ மாதம் ......... ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இங்கு கையொப்பமிட்டவர்கள் தான் மட்டுப்படுத்தப்பட்ட ..................... கள்ளு உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் பதிவுக்காய விண்ணப்பத்திலும் கையொப்பமிட்டவர்கள்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (முற்றும்)

# கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் ... ... | -04 |
| 2. | கடன் முறிப்பத்திரம் ... ... | -05 |
| 3. | மத்தியஸ்தத்திற்கு மனு ... ... | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் ... ... | -05 |
| 5. | அங்கத்தவர் பாஸ் புத்தகம் (நாணய சங்கம்) ... | -25 |
| 6. | ப. நோ. கூ. சங்கப் பாஸ் புத்தகம் ... ... | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு ... ... | 8-00 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) ... | 3-50 |
| 9. | ,, ,, (பண்டசாலை) ... ... | 9-00 |
| 10. | கடன் இடாப்பு ... ... | 4-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு ... ... | 2-25 |
| 12. | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) ... ... | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) ... ... | 7-00 |
| 14. | ,, (ப. நோ. கூ. சங்கம்) ... ... | 6-00 |
| 15. | சிட்டைப்புத்தகம் 20/1 ... ... | 3-25 |
| 16. | ,, 8/1 ... | 3-75 |
| 17. | மனேஜர் பிணைப்பத்திரம் ... ... | -20 |
| 18. | பொருள் பேரேடு ... ... | 7-00 |
| 19. | அங்கத்துவ மனுப்பத்திரம் ... ... | -03 |
| 20. | பங்கு இடாப்பு ... ... | 3-50 |
| 21. | பங்குப்பணச் சிட்டை ... | 1-30 |
| 22. | விலைபொருள் இடாப்பு ... ... | 6-25 |
| 23. | உபவிதிகள் ப. நோ. கூ. சங்கம் ... ... | -40 |
| 24. | விவசாயக்கடன் மனுப்பத்திரம் ... ... | -10 |
| 25. | விவசாயக்கடன் முறிப்பத்திரம் ... ... | -05 |
| 26. | நெசவுச்சங்க உபவிதி ... ... | -40 |
| 27. | சமாசங்களின் கணக்குமுறை ... ... | 2-50 |
| 28. | ப. நோ. கூ. ச. சமாச உபவிதி ... | -45 |
| 29. | செக்கவிற்பனவுச் சிட்டை (நெசவு) ... | 2-00 |
| 30. | நடற்தொழிலாளர் கூ. க. வி. சங்க உபவிதி ... | -75 |
| 31. | டைமுறைவிதிகள் (கடற்தொழிலாளர் சங்கம்) | -75 |
| 32. | உறுப்புரிமை விண்ணப்பப்பத்திரம் ... ... | -05 |
| 33. | நியமன விண்ணப்பம் இல. 2 ... ... | -04 |
| 34. | ,, இல. 3 ... ... | -04 |
| 35. | சொள்வனவு பாஸ் புத்தகம் ... ... | -75 |
| 36. | கூட்டுறவுக்கொடி (பெரியது) ... ... | 5-00 |
| 37. | ,, ,, (சிறியது) ... | 2-00 |
| 38. | ஊழியர் சகாயநிதி-பத்திரம் 'சி' புத்தகம் ... | 5-00 |

தேசீய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு
மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| **நாடகம், நடனம்** | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| | பகல் ,, ,, | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு ,, ,, | 175-00 |
| | பகல் ,, ,, | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் – பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 2 மணித்தியாலங்கள் | 200-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பிணை** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238

Published by the Jaffna District Committee, National Cooperative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Division Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at N. P. Co-op. Printing & Publishing Socy., Ltd., Jaffna.